வாக்குமூலம்

தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் S.C No.05/2023

வழக்கு சாட்சி – PW – 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு. பூமிநாதன் | தொழில் | :: |
| தந்தை பெயர் | :: | வயது | :: |
| கிராமம் | : | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 03.09.2024.

எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.

முதன்மை விசாரணை (நேரம் : பிற்பகல் 12.30 மணி )

நான் தற்போது வாலாந்தரவை அம்மன்கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 முரளி எனது தம்பி. சாட்சி பட்டியல் சாட்சி 3 சுந்தரி எனது அம்மா, சா.ப.சா.4 எனது மைத்துனர். ஆஜர் எதிரியை தெரியும். எங்கள் ஊரை சேர்ந்தவர். கடந்த 02.04.2022 ஆம் தேதி மதியம் 3.00 மணியளவில் நடராஜன் மகன் நாகேந்திரன், ஆஜர் எதிரி கார்மேகம், அ.சா.1 முரளி ஆகிய மூவரும் இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகே உள்ள மது கடையில் மது அருந்திவிட்டு அந்த இடத்திற்கு அருகில் இருக்கும் பச்சை குத்தும் இடத்திற்கு சென்றுள்ளார்கள். அங்கு என் தம்பி என் அம்மாவின் படத்தை பச்சை குத்தியுள்ளார். அதற்கு நாகேந்திரன் பணம் கொடுத்துள்ளார். ஆஜர் எதிரியும் பச்சை குத்துவதற்கு நாகேந்திரனிடம் பணம் கேட்டுள்ளார். அதற்கு நாகேந்திரன் பணம் கொடுக்க முடியாது என்று சொல்லியுள்ளார்.

அதனால் நாகேந்திரனுக்கும் ஆஜர் எதிரிக்கும் வாய் தகராறு ஏற்பட்டுள்ளது. அங்கு இருந்தவர்கள் சண்டையை விலக்கிவிட்டுள்ளார்கள். அதன் பின்பு என் தம்பி அ.சா.1 முரளியும் கார்மேகமும் என் ஊருக்கு அருகிலுள்ள இரட்டை புளியமரத்தில் அமர்ந்து மீண்டும் மது அருந்தியுள்ளனார். அங்கு இருவருக்கும் வாய் தகராறு ஏற்பட்டுள்ளது. வாய் தகராறு ஏற்பட்டவுடன் இருவரும் தனிதனியாக பிரிந்து சென்றுள்ளார்கள். எதிரி கார்மேகம் எனது தம்பியை பார்த்து என்னடா தாயோழி உனக்கு பிரச்சனை, இருடா பார்த்துக்கிறேன் என்று மிரட்டிவிட்டு சென்றுவிட்டார். பின்பு இரவு 9.00 மணியளவில் நான், என் அம்மா, தம்பி அ.சா.1 முரளி ஆகிய மூவரும் வீட்டிலிருந்தோம். அப்போது எதிரி கார்மேகத்திடமிருந்து எனது தம்பி முரளிக்கு போன் வந்தது. போனில் வீட்டிற்கு வாடா பேசி கொள்ளலாம் என எதிரி கூறியதன் அடிப்படையில் என் தம்பி எதிரியின் வீட்டிற்கு சென்றார். நான், என் அம்மா, மைத்துனர் பாலமுருகன் ஆகிய மூவரும் பின்னால் சென்றோம். என் தம்பி எதிரியின் வீட்டிற்கு வெளியே நின்று எதிரியிடம் கேட்டபோது இருவருக்கும் வாய் தகராறு ஏற்பட்டது. பின்பு எதிரி கார்மேகம் அவரது இடுப்பிலிருந்த மரப்பிடியுடன் கூடிய பாளை அருவாளை எடுத்து வெட்டும்போது என் தம்பியின் வலது தோள்பட்டையில் பட்டு காயம் ஏற்பட்டது. இரண்டாவது வெட்டும்போது வலது கை மேல்கையில் பட்டு காயம் ஏற்பட்டது. அடுத்த இரண்டு வெட்டுக்கள் வலது முன்னங்கையில் மணிக்கட்டிற்கு மேல்புறம் பட்டு காயங்கள் ஏற்பட்டது. எதிரி வெட்டும்போது தாயோழி செத்து தொலைடா என்று சொல்லி என் தம்பியை வெட்டினான். நான், என் அம்மா, மைத்துனர் பாலமுருகன் ஆகிய மூவரும் சத்தம்போட்டபோது எதிரி,

இன்னைக்கு தப்பிச்சிட்டடா என்னைக்கு இருந்தாலும் என் கையில்தான் உனக்கு சாவு என கூறிவிட்டு ஓடிவிட்டார். மற்றொரு தம்பி சரவணனுக்கு தகவல் தெரிந்து இருசக்கர வாகனத்தில் சம்பவயிடத்திற்கு வந்து என் தம்பி முரளியை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றான். நாங்கள் பின்னால் ஆட்டோவில் மருத்துவமனைக்கு சென்றோம். கேணிக்கரை போலீசார் மருத்துவமனைக்கு வந்து என் தம்பி முரளியிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். எதிரி பயன்படுத்திய அரிவாளை என்னால் அடையாளம் காட்டமுடியும். தற்போது என்னிடம் காட்டப்படும் அரிவாள்தான் எதிரி என் தம்பியை வெட்டுவதற்காக பயன்படுத்திய அரிவாள். இது சம்பந்தாக கேணிக்கரை போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லை என்பதால் குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம்/–சி.மோகன்ராம்)
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.